பிரஸார் பாரதி

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

08 04 2024 12 40 திங்கட்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மக்களவைத் தேர்தலில் இம்மாதம் 26-ஆம் தேதிக்கு நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 88 தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

2. தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி காலியானதாக சட்டப்பேரவை செயலகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

3. என் சி இ ஆர் டி பாடப்புத்தகங்களில் உள்ள தகவல்களை முன் அனுமதியின்றி பயன்படுத்துவோர் மீது பதிப்புரிமை சட்டத்தி.ன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. இந்தியா – பெரு நாடுகளுக்கு இடையே வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான ஏழாவது கட்ட பேச்சுவார்த்தை இன்று தொடங்கியது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் வேட்புமனுக்களை திரும்பப் பெறுவது இன்றுடன் நிறைவடைகிறது.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 தொகுதிகளுக்கு இம்மாதம் 26-ஆம் தேதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த தொகுதிகளுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படும்.

**[]<<<>>>[]**

இதனிடையே முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 102 தொகுதிகளில் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

வாக்குப்பதிவுக்கு இன்னும் 10 நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்தத் தொகுதிகளில் முகாமிட்டு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சிக்காலத்தின்போது மக்கள் நலத் திட்டங்கள் பெருவாரியாக செயல்படுத்தப்பட்டதால் மக்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்ததுடன், உலக அளவில் அதிகபட்ச அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்த நாடாக இந்தியா திகழ்வதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அனுராக்சிங் தாக்கூர், கூறியுள்ளார்,

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கச்சத்தீவு விவகாரத்தில் திமுக-வும, காங்கிரஸும் மவுனம் காப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

நாடு முழுவதிலும் ஐ என் டி ஐ கூட்டணிக்கு செல்வாக்கு குறைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சென்னையில் இன்று தமிழ் ஜனம் என்ற தனியார் தொலைக்காட்சி சேனலை அக்கட்சியின் முன்னாள் மாநில தலைவரும், மத்திய இணை அமைச்சருமான திரு எல் முருகனுடன் இணைந்து திரு அனுராக் தாக்கூர் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

கச்சத்தீவு விவகாரத்தில் திமுக, காங்கிரஸ் மவுனம் சாதிப்பதாகக் கூறப்பட்ட நிலையில் திமுக மூத்த தலைவர் திருமதி கனிமொழி பதிலளித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், இந்திய – சீன எல்லைகளில் உள்ள பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் கேட்ட கேள்விகளுக்கு பிஜேபி பதிலளிக்கவில்லை என்றும், தேர்தல் நேரத்தின்போது இந்த விவகாரத்தை எடுத்திருப்பது அரசியல் காரணத்துக்காக மட்டுமே என்றும் கூறினார்.

கச்சத்தீவு விவகாரம் குறித்து திமுக பலமுறை மத்திய அரசுக்கு முறையிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளாக இந்த விவகாரத்தில் ஏதும் செய்யப்படவில்லை என்பது புதிராக இருப்பதாக திருமதி கனிமொழி கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற சோதனையின்போது ஐந்து கோடிக்கும் கூடுதலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் சிக்கியதாக வருமான வரிததுறை தெரிவித்துள்ளது.

400 கோடி ரூபாய் மதிப்பிலான ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சென்னை, நெல்லை, சேலம் உள்ளிட்ட நகரங்களில் 44-க்கும் மேற்பட்ட இடங்களில் தேர்தல் பணப்பட்டுவாடா தொடர்பான புகார்களின் அடிப்படையில் சோதனை நடைபெற்றதாகவும் வருமான வரித்துறையினர் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி காலியானதாக சட்டப்பேரவைச் செயலகம் தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது.

இத்தொகுதியில் வெற்றிபெற்ற திமுக உறுப்பினர் புகழேந்தி உடல்நலக் குறைவால் அண்மையில் காலமானதை அடுத்து அந்த தொகுதியில் இடைத்தேர்தல் நடத்துவதற்கு ஏதவாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இனி தேர்தல் களம்,

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது கரூர் மக்களவைத் தொகுதி

*(வாய்ஸ் பைட் - பாலகிருஷ்ணன்— 77 செகண்ட்ஸ்)*

[]<<<>>>[]

இந்தியா – பெரு இடையே வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான ஏழாவது சுற்றுப் பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் தொடங்கின.

இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிக்கும் நோக்கில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

மத்திய வர்த்தக தொழில்துறை இது தொடர்பாக வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்தியா – பெரு இடையே வர்த்தக உறவுகள் மேம்படுவதற்கு இந்த ஒப்பந்தம் உதவிடும் என்றும் இரு நாட்டு பொருளாதாரமும் வளர்ச்சிபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமம் என் சி இ ஆர் டி-யின் பாடப்புத்தகங்களில் உள்ள தகவல்களை உரிய அனுமதியின்றி அச்சிடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த குழுமம் விடுத்துள்ள அறிவிப்பில், வர்த்தக ரீதியாக பாடப்புத்தகங்களில் உள்ள தகவல்களை பயன்படுத்தினால் பதிப்புரிமை சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அது கூறியுள்ளது.

பொதுமக்கள் பாடப்புத்தக தகவல்களுடன் தயாரிக்கப்படும் பயிற்சி புத்தகங்களை தங்கள் பிள்ளைகளுக்கு வாங்கித்தர வேண்டாம் என்றும், அவை மாணவர்களுக்கு தவறான தகவல்களை அளித்து அவர்களின் படிப்பில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற புத்தகங்கள் சந்தையில் விற்கப்படுவது தெரிய வந்தால் உடனடியாக தேசிய கல்வி ஆராய்ச்சி குழுமத்துக்கு தெரிவிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தில்லி மதுபான கொள்கை முறைகேடு தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பாரதீய ராஷ்டிர சமீதி கட்சியைச் சேர்ந்த திருமதி கவிதா-வுக்கு இடைக்கால ஜாமீன் வழங்க தில்லி தனி நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அவரது ஜாமீன் மனு சிபிஐ தனி நீதிபதி திருமதி காவேரி பவேஜா முன் விசாரணைக்கு வந்தபோது அமலாக்கப் பிரிவு சார்பில் ஜாமீனுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அவருக்கு ஜாமீன் வழங்கினால் இவ்வழக்கில் ஆதாரங்கள் அழிக்கப்படும் என்றும், சாட்சியங்கள் கலைக்கப்படக்கூடும் என்றும் அமலாக்கப்பிரிவு சார்பில் தெரிவிக்கப்பட்டது,

**[]<<<>>>[]**

உலக பிரசித்திபெற்ற மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரை திருவிழாவுக்கான முகூர்த்தக்கால் ஊன்றும் நிகழ்வு இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரகுராஜா ) -47-- செகண்ட்*

**[]<<<>>>[]**

வாக்குக்கு பணம் கொடுப்பதை தடுக்க வலியுறுத்தி கோவையைச் சேர்ந்த ஒரு அமைப்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதற்கு நிபந்தனையுடன் அனுமதி அளிப்பதாக தேர்தல் ஆணையம் சென்னை உயாநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மனு தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா, நீதிபதி திரு சத்திய நாராயண பிரசாத் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தபோது இம்மாதம் 11-ஆம் தேதி இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதற்கு நிபந்தனையுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தேர்தால் ஆணையத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7—30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி – ஒடிஸா அணியை எதிர்கொள்கிறது.

***End of News***